விசேஷ விளம்பரத்திற்கு!

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

விசேஷ விளம்பரத்திற்கு!

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ருக] யாழ்ப்பாணம்:— விஷு ௵ புரட்டாதி ௴ ௨௭ ௨ (1941 அக்டோபர் 13 திங்கட்கிழமை) [இலக்கம் ௫0]


## சிவஞானபோதம்

௯-ஆம் சூத்திரம்

[தருமபுர ஆதீனம்: மெய்கண்டான் சித்தாந்தமகாநாட்டிற் படிக்கும் வண்ணம், யாழ்ப்பாணம் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் எழுதிய கட்டுரை. (28-8-41)]

(முற்றொடர்)

சிவபெருமான பிரபஞ்சங்களின் இயல்புபற்றி அறிப்படாதவர் என்பதை "அப்பாலைக் கப்பாலைக் கப்பாலான்" என்னும் திராவிட சுருதியால அறியலாம்.

தத்துவங்களைப் படிமுறையாகக் கண்டு சென்று சிவபெருமானைச் சேர்தலை

முப்பதுமாறும் படிமுத்திபெனியை யொப்பிலா வானந்தத் தன்னொளி புக்கு
செப்பவரியசிவங்கண்டு தான்றெளிக் தப்பரிசாக வமர்ந்திருந் தாரே

என்த் திருமந்திரத்திற் கூறப்படுதலாலும்,

காணு மன்பு முன்பு
களிர்வரை பெறுத்தாமும்
பேணு தத்துவங்க ளென்னும்
பெருகுசோ பானமேறி
ஆணையாஞ் சிவத்துதச்
சாரவணைப பர்போலவையர்
நீணிலை யணையபேறி போர்படச்
செல்லும் போதில்

எனக் கண்ணப்ப நாயனார் புராணத்திற் கூறப்படுவதாலும்,

பூதமுங் காணம் பொறிகளைப்புலனும் பொருந்திய குணங்களோர் மூன்றும்-நாதமுங் கடந்த வெளியிலே நீபு நாணுமாய் நிற்கு நாளு ளதோ.

எனப் பட்டினத்தடிகள் திருப்பாட்டிற் கூறப்படுவதாலும் அறியலாம்.

அசத்தை அசத்தென்று கண்டவிடத்துத் தோன்றுவது பதிஞான மேயன்றிப் பிறிதில்லையென்பது.

ஏகதேச உணர்வினாற்சுட்டி யுணரப்படும் பிரபஞ்சத்தாகத ஒவ்வொன்றாகச் சுட்டி அசத்தென்று கண்டு கொண்டு சென்றவிடத்து முடிவின் கண் விஷயமாவது அவ்வசத்தின் வேறுபிய சத்தேயாம். அச்சத்துச் சிவமன்று உயிரேயாம் எனில், சுட்டியறியும் பொருளாகிய உயிர் சுட்டிறந்தறியும் பரிபூரணமாகிய சத்தாகாது. ஆதலால் அசத்து நீங்கியவிடத்துத் தோன்றுவது சிவமேயாம்.

அவ்வாறுயின் ஆன்மாச் சுட்டியறியும் ஏகதேச அறிவு நீங்காமல், எக்காலத்தும் அசத்தோடு கூடி அசத்தாய் இருக்குமோ எனின்; அசத்தோடு கூடிநின்று அவ்வசத்தைச் சுட்டியறிந்து வந்த ஆன்மா அவ்வசத்தை நீங்கியவிடத்து, நிறைவான பொருளாய்த் தோன்றும் சத்தில் அடங்கி அச்சத்தினைச் சேரின் அதனாலே சுட்டியுணர்வாகிய இயல்பு ஆன்மாவை விட்டு நீங்கும். ஆதலால் ஆன்மாச் சதசத்தாகும் என்பதும் உணரலாம்.

சுட்டி புணர்வதனைச் சுட்டி
யசத்தென்னச்
சட்டவினியுளது
சத்தேகான்—சுட்டி
புணர்ந்தநீ சத்தல்லை
யுண்மையைத் தைவம்
புணர்ந்ததனுற்
பொய்விட்டுப் போம்.

அசத்தை அசத்தென்று கண்டு நீங்கிச் சத்தாகிய சிவத்தை அடைதற்கு உபாயம் கூறுதல்

பிருதிவிமுதல் நாதமீறாகிய பிரபஞ்சத்தை அசத்தென்று நீங்கியவிடத்து, அவ்வனங் கண்ட தன்னறிவின் கண்ணே சுட்டுணர்வின்றி நின்ற சத்தாகிய சிவத்தை ஆராய்ந்து அச்சிவஞானத்தினாலே ஆசாரியன் சிவோயம் ஆத்மா—சிவன் இத்த ஆன்மா; என்று தன்னுள்ளே பாவித்துச் சிவத்துவமணி சிவன் நீ ஆகின்றாய் என்றறிவுறக்கும் சித்தாந்த மகா வாக்கியப் பொருளை காட்டோதும் பயின்று, சிவோஹம் சிவன் நானென்றேன்; என்று பாவிப்பானுயின் அந்தப்பாவகத்தில் விளக்கும் சிவனுல் அநாதியே கூடிய போது இயல்பையும் அதற்கு ஏதுவாகிய மாயா கன்மங்களையும் தான் விட்டு நீங்கும். அவ்வியல்பு எது போலுமெனில்; கருடமந்திர தியானத்தினால் விளங்கும் கருடனால் அந்தக் கருடபாவனை விஷத்தைப் பிரத்தியக்ஷத்தில் நீக்கிவிடுதல் போலாம். இதை,

கண்டதை யன்றன் றெனவிடுக் கண்டசததா
பண்டேயே யான்மாவிலாய்த் துணரப்-பண்டேயேந்த
ஆனந்தத்தானைவிடுமா றந்தமனினைன் கருட
சானத்திற் றீவிடம்போறு ரன்.
(வெண்பா ௬)

என்னும் திருவெண்பாவினுல் உணர்த்தப்பட்டது.

ஆன்மாதானென்று அறிந்த உடம்பு முதலிய பாசமெல்லாம் ஆன்மாபாதத்தினாலே காணப்படாமல், விசுவாதிதனாய நிற்கும் சிவனும் நானல்லேன் என்று புந்தி பண்ணிக் கசிந்த சம்பந்தத்தினாலே அடிமைத்திறத்துடன் சோகம் பாவனை செய்ய, அப்பொழுது அவனிடத்தில் அகங்கிபமாய்நின்ற ஈசானார் பிரகாசிப்பர்; அப்போது அநாதியாக அவனிடத்துப் பற்றிய மலம் நீங்கும்; அது கருட பாவனையினால் விடம் நீங்குவது போலாம் என்பது தாற்பரியமாம்.

கண்டவிவை யல்லேனு னென்றகன்று காணுக்
கழிபாமு காவல்ல னெனக் கருதிக் கசிந்த
தொண்டினெடுமுளத்தவன்ரு னின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
விண்டகலுமலங்களெலாங் கருடநியானத்தால்
விடமொழியு மதுபோல விமலதையு மடையும்
பண்டைமறை களுமது நானானெ னென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே.

என வழி நூலாசிரியர் ஓதியருளிய வற்றால் உணரப்படும்.

தத்துவமசி என்னும் வேதாந்த மஹாவாக்கியம் ஏகப் பொருளுணர்த்தாது முப்பொருளுணர்த்தும். தத்-அது; துவம்-நீ; அசி-ஆனுய் என்று விடத்து ஆனுயென்பதனால் அதற்கு முன் ஆகாது நடுத்து நின்ற பொருள் உண்டென்பது சித்திக்கது அதுவே பாசமாம்; அது என்றது பதியை; துவம் என்றது பசுவை; ஆனுய் எனறதனால் பெறப்பட்ட பாசத்தோடு தத்துவமசிமுப்பொருளுணர்த்துமாறு தெளியப்படும். இவ்வாறே சிவத்துவமசியும் முப்பொருளுணர்த்தும்.

இந்தத் தேவதை வேறு நான் வேறு என்று ஒரு தேவதையைப் பாவனை பண்ணுமிடத்து அவன் அத் தேவதையை அறியமாட்டான்; ஆதலால் அவன் நான் பிரமமென்று அபேத பாவனை பண்ணுவிருனே அவன் உலகெலாமாகின்றான் எனப் பிருகதாரணியமும் ஆகமமும்

பேதமாகியபாவனைபேணுவதெல்லா
மேதமாகிய பந்தமே யெனநியானே னுமால்
போத வாநுயி ரபேதபா வனைபுரிவந்தே

* ஆர்க்கியம்—வேறுகாமை.

மாதாபுயர் முத்தியென் றரைத் திடு மறையும்.

எனத் திருவாதவூரக்கப் புராணமும் கூறுகின்றன.

கருட தியானத்தினால் விஷமானது நீங்குகின்றது; அப்படியே சிவானந்த தியானத்திலே சர்வபாவங்களினின்று நீங்கி முத்தியைத் தலைப்படுகிறுன் என வாதுளாகமமும் கூறும்.

உலகத்திலே மாந்திரிகர் கருடமந்திரப்பியாசத்தினாலே கருடனுடைய அசாதாரண குணத்தை அடைகின்றனர். அதனின் பிரமாஹம்பாவனை முற்றியபோது பிரமத்தினிய சர்வஞ்ஞத்துவ முதலிய அசாதாரண குண விசேடத்தை அடைதலாகிய விசேடங்கள் உபாசகர்கட்கு எய்தும் என்பதில் யாதுந் தடையில்லை என்று நீலகண்ட பாஷ்யத்திலே கூறப்படுகின்றது.

எங்ஙனம் கருடன் விஷத்தை நீக்கும் சாமர்த்திய விசேடத்தைக் கொடுத்தலினுல் மாந்திரிகரை அனுக்கிரகிக்கின்றதோ; அங்ஙனம் சிவபெருமான் பசுத்துவத்தை நீக்கும் பயனைக் கொடுத்தலினுல் உபாசகர்களை அநுக்கிரகிக்கின்றனர் என அப்பய தீட்சிதரும் சொல்லியிருக்கின்றார்.

வேதத்தில்ஆண்டாண்டுப் பிரமப் பொருளாகிய சிவபெருமானுக்கும் உயிர்கட்கும் அத்துவிதங் கூறியது என்னையெனில்; கருடனும் மாந்திரிகனும் தம்முள் வேறுதல் வெளிப்படையாயினும்கருடோஹம்பாவனை விஷத்தை நீக்கல் மாந்திரிகர்க்கே வேண்டப்படும். அது போலச் சிவனை சிவன் என்னும் பதார்த்தங்க

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## இந்தியச் செய்திகள்

### விஷவாயுப் பிரயோகம்!

#### சீனுவில் ஜப்பானியரின் அக்கிரமம்

லண்டன், அக் 7

பிருத்தானிய றேடியோ அறிவித்திருப்பதாவது:-

சங்சோகருக்கு வெளியேயுள்ள ஜப்பானியப் படையைப் பலப்படுத்தப் புதிதாக ஏராளமான ஜப்பானியத்துருப்புகள் அங்கு போய்ச் சேர்ந்திருக்கின்றன.

நேற்றும் இன்றும் ஜப்பானியர் விஷவாயுவைப் பிரயோகித்ததாகச் சீன அதிகாரிகள்சொல்லுகின்றனர்.

### ஸ்ரீமதி கமலாதேவி காந்திஜீயைக் காண்பார்

பம்பாய், அக் 5

உலகத்தின் பலபாகங்களிலும் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டு சமீபத்திற் பம்பாய்க்குத் திரும்பியுள்ள ஸ்ரீமதி கமலாதேவி மகாத்மாவைக் காண ...க் திகதி வார்தாவுக்குப் போவார். நவம்பர் ஸ்ரீ நடக்கவிருக்கும் பம்பாய் ஸ்திரீகள் மகாநாட்டில் ஸ்ரீமதி கமலாதேவி தலைமை வகிப்பார்.

தொடர்ச்சி 3ம் பக்கம்)

## நாம் செய்ததென்ன?

(திரு—சங்கு—சாது)

(முற்றொடர்)

### 2. இராமநாதர்

இலங்கை அரசாங்கசபையில் தமக்கொப்பாரும் மிக்காருமில்லாமல் ஐம்பது வருடங்களாக அங்கத்தவராகவிருந்தும் ஜீவிய பரியந்தம் இடைவிடாது சலிப்பாதும் இராப்பகலாக உழைத்துவந்த மகான்—இலங்கை முழுவதற்கும் சேவை செய்த பரோபகாரி தமது சொந்தப் பணத்திலே பொதுசனங்களின் தேவைக்காகக் கோயில்களையும் பாடசாலைகளையும் கட்டி உவந்தளித்த பொன்னர்—ராமநாதர்—இவர்க்கு நாம் எமது நன்றியறிதலைக் காட்டுவதற்குச் செய்ததென்னே! அவர்தம் உருவச் சிலையை சென்ற ½ நூற்றாண்டுகளாக எம்மில் சண்டை போட்டுக்கொண்டு நாம், நாட்டி வையாதிருக்கிறோம். உருவச் சிலையை நாட்டி வைப்பது அவர் ஞாபகத்தை நிலைநாட்டுவதாகும். அதற்குமேல் அதனால் வரவர்களுக்கேதேனும் பலனுண்டா? எமக்கு இன்று வேண்டியது எமதூரவர்களால்ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைகளே. எமக்கு யாழ்ப்பாணப் பட்டினத்தில் ஓர் பெண் விடுதிப் பாடசாலை வேண்டும். இலங்கைத் தமிழர் களாகிய எங்களுக்கும் கண்டி, காலி, கொழும்பு எனனுமிடங்களில் ஆடவர்களுக்குத்தானும் உயர்தரச் சைவப்பாடசாலைகளில் முந்தப் பெரியார் எங்களுக்குச் செய்த சேவைக்கும் பணிக்கும் எமது நன்றியைப் பாராட்டும் பொருட்டு மேற் குறித்த இடங்களில் சைவப் பாடசாலைகளை நாம் ஸ்தாபிக்கவேண்டாமா? ஆகவே இவர் உருவச்சிலை இந்த வருடத்தில் நாட்டப்படினென் படாவிடினென் அவர் ஞாபகார்த்தமாக எமக்கு வேண்டிய பாடசாலைகளை ஸ்தாபிக்க முன்வருவோமாக! இவர்தம் உருவப்படத்தையும் நாமத்தையும் சமயகுரவர் ஐவருடனும் (ஐந்தாம் சமயகுரவர் நாவலர்) வைத்து வருடாவருடம் எமது வருடப்பிறப்போடொட்டி ஒரு வாரத்திற்குப் படத்திறப்பு விழாக் கொண்டாடுவோமாக! இதுவே சிறந்த ஞாபகச்சிலையாம்!

### 3. ஏனைய பரோபகாரசீலர்கள்

எங்களூரில் சைவப் பாடசாலைகளை ஸ்தாபிப்பதற்கு அநேகர் தம் வாழ்நாளில் அரிய நேரத்தையும் பொருளையும் செலவு செய்து சேவையும் செய்தார்கள். இன்னும் அநேகர் பணி செய்கிறார்கள் — ஏ. இராசரத்தினம் போன்றாரும் மற்றோரும் அரும் பாடுபட்டுழைத்து வருகிறார்கள் — இவர்களெல்லாம் தங்கள் அரியநேரத்தையும் பொன்னையும் செலவு செய்தது— செய்வது— எமது பாடசாலைகளிலெல்லாம் சமயக்கல்வி பயிற்றப்படவேண்டுமென்ற எண்ணத்தினுலும் எமது பிள்ளைகளெல்லாம் உள்ளூரவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கவேணுமென்றதினுலுமல்லவா? இதையெல்லாம் எங்களில் அநேகர் மறந்துவிடுகிறார்கள். மறந்துவிட்டது தான்தோன்றிகளாகத் தமக்கே யெல்லாம் தெரியுமென்ற எண்ணமாக நடந்துகொள்ளுகிறார்கள். இப்படி மறந்த எம்மைத்தான் சமயாபிமானம் தேசாபிமானம், பாஷாபிமான மில்லாத போலிச் சைவர்களென்பது. அல்லது சைவர்களிலே யே அசைவர்களென்பது. இன்னும் வேறுவிதமாக சொல்லுவிலிப்படியான நாமே குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பு போன்றவர்களென்பது எங்கள் பரோபகாரிகளுடையவும் பொதுநல வீரர்களுடையவும், சமயம் மொழி நாட்டிற்காகப் பாடுபட்ட பெரியோர்களுடையவும் சேவையை மறவாதிருப்பதற்கும் எமது நன்றியறிதலைக் காட்டுவதற்கும் இப்பெரியோர்களை எங்கள்பின் சந்ததியாருக்குத் தெரியவைப்பதற்கும் நாம் என்னசெய்து வருகிறோம். சைவப்பாடசாலைகளில் உள்ள இடங்களிலும் எங்கள் பிள்ளைகளைப் பரதேசிப்பாடசாலைகளிற் படிக்கவைப்பதாலுமா எமது நன்றியறிதலைக் காட்டவருவது, இத்தப்பரோபகாரிகள் எங்களுக்குச்செய்த பெரும்பணியையும் தொண்டையும் மறவாதிருப்பதற்கும் எங்கள்பிள்ளைகளுக்கு இவர்கள்செய்த பணியையும் சேவையையும் எடுத்துக்காட்டுவதற்கும் வருடமொருமுறை பரோபகாரிகள் வாரமென இருவாரத்தை எமதூரில் கொண்டாடுவதாக.

இன்று பண்டிதர் மகாலிங்கசிவம் எம்மை விட்டுப்பிரிந்த மனவேதனையொருவாறு சாந்திபண்ணவிரும்பி அவர்தம் ஞாபகார்த்தமாக ஏதேனுமொரு முற்போக்கான கருமமாற்றவேணுமென்று இலங்கைத்தமிழர்கள் ஊக்கங்கொண்டிருப்பது மகிழ்ச்சிக்கிடமாயிருந்தது. ஆனால் மகாலிங்கசிவ பாடசாலையென்றோர் பாடசாலையையோ பெண்விடுதிப் பாடசாலையையோ அல்லது பெண் அநாத விடுதிப்பாடசாலையையோ அல்லது பெண் அநாதப் பாடசாலையையோ ஸ்தாபிப்பதுதான் அறிவுடைய சான்றோர் செயலாகும். நமயக்கள் இதைக்கவனிப்பார்களாக.

### பொது

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரையும், வேர், பொன். ராமநாதரையும் இன்னும் அவர்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றி எமக்கு நூற்றுக்கணக்கான பாடசாலைகளைத் தந்த பெரியார்களையும் இன்னும் மதப்பற்று தேசப்பற்று உந்தப்பட்டு எமது முன்னேற்றத்திற்காக உழைத்து வருவோரையும் நாம் பொன்னேபோற் போற்றவேண்டும்.

ஆகவே இனியாகுதல் எமது பெண்மணிகளும் ஆடவர்களும் விழித்தெழுந்து வருடமொருமுறை பரோபகாரிகள் வாரமென்று அல்லது தேசிக சேவை செய்தோர் வாரமென்றோர் வாரத்தை எமது வருடப்பிறப்போடொட்டி நடாத்தி அவர்கள் படங்களைத் திறந்துவைத்து விழாக் கொண்டாடி எமக்குள்ள குறைவுகளை ஆராய்ந்து தேசசேவை செய்வது நன்று. இவற்றுள் நாம் பிரதானமாகச் செய்யவேண்டியது பாடசாலைகளில்லாத ஸ்தலங்கள் தோறும் பாடசாலைகளை நாட்டல், சைவப்பாடசாலைகளில் சமயக்கல்வியைப் போதித்தல், நமது பிள்ளைகள் அனைவரையும் எமது பாடசாலைகளில் கல்விபயிலச் செய்தல், ஊர்கள்தோறும் சைவசமயப் பிரசாரஞ் செய்வித்தல், சமயம் மொழி, நாடென்பனவற்றில் அபிமானமுடையாரைப் பொன் போல் போற்றல் முதலியனவே.

கிறிஸ்து சுவிசேஷகரும் உலகில் இவ்வாறு பரவியதேன்? அவரவர் தாய் மொழிகளில் "பைபிளை" மொழி பெயர்த்து இலட்சக் கணக்கில் அச்சிட்டு வழங்குகிறார்கள், பாதிரிமார்கள் ஊர்தோறும் கிராமம் கிராமமாகச் சென்று பிரசாரம் செய்கிறார்கள். வீடுவீடாகச் சென்று போதிக்கிறார்கள். பொதுசனத்தை உன்னத்தை வசப்படுத்துகிறார்கள். அதுபோல நம் அருட்புலவர்கள் இயற்றிய பதினூல்களாகிய திருமூலர்—திருமந்திரம்; திருவாசகம், தேவாரம், தாயுமானவர் பாடல், அருட்பா, திருக்குறள் முதலிய நூல்களையெல்லாம் எமது பாடசாலை மாணவர்களுக்கும் பாமரருக்கும் இனிய எளிய உரைநடைகளில் தெளிவாக எழுதி வீடுதோறும் பிரசாரஞ் செய்து வழங்குதல் வேண்டும்:

தொடர்ச்சி 4ம் பக்கம்

## பெரிய ஆஸ்பத்திரி உணவுப் பொருள் வசதி

### மார்க்கெற்றிங் பகுதி செய்துவருகிறது

கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகளுக்குப் பெரும்பாலும் உணவுப் பொருள்களை 'மார்க்கெற்றிங்' பகுதியே அளிப்பதற்கேற்ற புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று அறியப்படுகிறது. குறிப்பிட்ட சில உணவுப் பொருள்களைத் தவிர மற்றவைகளை எல்லாம் மார்க்கெற்றிங் பகுதியே பெரிய ஆஸ்பத்திரிக்கு உதவி வருகிறது.

## சலந்தராரி

சிவபெருமான் சலந்தராசுரனைச் சங்கரித்தமை

தேவர்க்கரசனாகிய இந்திரன் பரமேசுரனைச் சேவிப்பதற்காகத் திருக்கைலாசகிரிக்குச் சென்றான். அப்பொழுது பரமசிவன் ஓர் பிராமணனைப்போல வாசலில் நின்றார். அவரை இந்திரன் நோக்கி, "ஆகனே! சிவபெருமானைத் தரிசிப்பதற்கு இது நல்ல சமயமா?" என்று கேட்டான். அதற்கு அவர் யாதும் கூறாது கோப நோக்கத்தோடு வாளாநின்றார். இந்திரன் அதிக கோபங் கொண்டவனுய் தனது வச்சிராயுதத்தைப் பிரயோகித்தான் அவ்வச்சிராயுதமானது அவர் மார்பிற்பட்டவுடன் தகனமாய்ப்போயிற்று. உடனே பரமசிவன் ஓர் உருத்திர வடிவங்கொண்டு, யாவரும் அஞ்சும்படி உக்கிரரூபமாய் உருத்து நின்றார். இந்திரன் வெருவிப் பலவகையாகத் துதித்தான். சிவபெருமான் கோபந் தணிந்து, அக்கோபாக்கினியை மேலைச் சமுத்திரத்தில் வீசினார். அது மேற்றிசைக் கடலில் வீழ்ந்து ஓர் குழந்தை வடிவாயிற்று. சமுத்திரராசன் அக்குழந்தையை எடுத்துக்கொண்டு போய் வளர்த்து வந்தான்.

அக்குழந்தை சிறிது அழுதபொழுது விண்ணும் மண்ணும் அட்டதிக்குகளும் செவிடுபட்டன. பிரமதேவர் அவ்வொலியைக் கேட்டுச் சமுத்திரத்தை அடைந்தார். அப்பொழுது, வருணன் அப்பாலகனைப் பிரமாவின் கையில் நீட்டினார். பிரமா வாங்கித் தமது மடியிற் கிடத்தினார். அப்பாலகன் அவருடைய நான்கு தாடிகளையும் தனது கையினால் வலியுடன் இழுத்துத் தூக்கினான். அவருடைய கண்களினின்றும் நீர் ததும்பியது. பிரமதேவர் அப்பாலகனுடைய கையினின்று தமது தாடிகளை மெல்லவாக நீக்கி, பெருமூச்சுவிட்டு வருணனுடைய கையிற் கொடுத்து, வருணனை நோக்கி, "இவன் சிவபெருமானுடைய கோபத்தினின்றும் தோன்றினன்; ஆதலால் ஒரு கடவுளையும் நினையான்; அவர்களிடத்து ஒரு வாதனையும் வேண்டான்; ஒருவராலும் அழியான்; இவன் பூவுலகத்தில் கொடுங்கோல் செலுத்தி அரசு புரிவான்; பரமசிவனையன்றி வேறு யார் இவனை வெல்ல வல்லார்" என்று கூறினார். வருணன் "இவனுக்குப் பெயரிடும்" என்றான். "நீரிற்றலையால் இவன் பெயர் சலந்தரன்" என்று பெயரிட்டுப் பிரமா தமதுலகடைந்தார்.

சலந்தரன் காளைப்பிராயமுடையவனுய் அவுணர் பக்ஷத்திற் சேர்ந்து தேவர்களை ஜயித்து அவர்களுடைய நகரங்களை அவுணர்களுக்குக் கொடுத்தான். பின்பு மகாபராக்கிரமசாலியாகிய அந்த அவுணன் மயன் என்னும் அசுரச்சிற்பியால் அமைக்கப்பட்ட சாலந்தரம் என்னும் பெயரையுடைய நகரத்தில் இருந்து அரசாட்சி செய்து வந்தான். அதன்பின் காலநேமி என்ற அசுரன்மகளாகிய விருந்தை என்பவளைச் சுக்கிராசாரியர் மணம் புணர்த்தி வைத்தார்.

தேவர்கள் யாவரும் அவனுக்குப் பயந்து மேருமலையில் ஒளிந்திருந்தார்கள். சலந்தரன் "நாம் அவரோடு போர் செய்யப் போவோம்" என்று சேனைகளுடன் அங்கே சென்றான். தேவர்கள் அவனைக் கண்டு மிருகசாபங் கண்ட யானைகள் போலத் தேம்பிச் செய்வதின்னதென்று அறியாது விட்டுணுவைத் தியானித்தார்கள். விட்டுணு மேருகிரியில் வந்து பலவருஷம் யுத்தம் செய்தும் அவனை ஜயிக்கமாட்டாதவராய்ப் புகழ்ந்து போயினர். திருமால் சலந்தராசுரனோடு போர் செய்யும் பொழுது தேவர்கள் பிரிந்துகொண்டு திருக்கைலாசமலைக்கு ஏகினர்கள்.

பின்பு, சலந்தராசுரன் தேவர்கள் திருக்கைலாசமலைக்குப் போய்விட்டார்கள் என்று கருதி, தன்னகரத்திற் போய்ச் சிலகாலமிருந்து அதன் பின்னர் அவர்களுடன் போர்புரிதற் பொருட்டுத் திருக்கைலாசமலைக்குப் புறப்பட்டான். புத்தியிற் சிறந்த அவன் மனைவியாள் "பரமசிவனோடு போர் செய்யப் போக வேண்டாம்; போகவேண்டாம்" என்று தடுத்தாள். சலந்தரன் சிறிதும் பொறுமையின்றிச் சேனைகளோடு திருக்கைலையின் ஒரு புடையிற் போயினான். தேவர்கள் நந்திபெருமானைத் தரிசித்து அவர் அநுமதி பெற்றுச் சிவபெருமானது திருமந்திரத்தினுள்ளே பிரவேசித்து மகாதேவரைத் தரிசித்துத் தண்டாகாரமாய் வீழ்ந்து நமஸ்கரித்துத் தோத்திரஞ் செய்து தங்கள் குறையை விண்ணப்பஞ் செய்தார்கள்.

சிவபெருமான் அவர்களுக்கு அபயஞ் செய்து, தண்டு கமண்டலங்களைக் கையிற்றாங்கி, நரைத்த திருமேனியுடையவராய், விருத்தப் பிராமண வேடங்கொண்டு, குடை யொன்று பிடித்துக்கொண்டு தேவர்கள் பின்னே வர, அவ்வசுரனை நோக்கி எதிரேபோய் "நீ யார்? எங்குள்ளாய்? யாரைத்தேடி இங்கே வந்தாய்?" என்று வினவினார். அசுரன் "தபசியே! என்பெயர் சலந்தரன். நான் தேவர்கள் சமஸ்தரையும் யுத்த பூமியிலே சயித்துவிட்டு இப்பொழுது சிவனை வெல்லுமாறு கைலைக்குப் போகின்றேன்" என்றான். அதனைக் கேட்ட அந்தணராகிய கடவுள், "சலந்தரா! யான் அவர் சமீபத்திலிருப்பவனே; நீ உயிர்பிழைக்க வேண்டுமாயின் வந்த வழியே மீண்டு செல்" என்றார். அதைக்கேட்ட சலந்தரன் அக்கினி போலக் கோபித்து, ஒருவராலும் நெருங்கவியலாத எனது வலிமையை நீ அறிந்திலை; அதனை ஓர் கொடிப்பொழுதிற் காட்டுகின்றேன்" என்று கூறினான். அச் சலந்தரனுடைய வார்த்தையைக் கேட்ட விப்பிரவடிவங் கொண்ட சிவபெருமான் 'அசுரா! அப்பெற்றியதாகிய உன் பலத்தைப் பார்க்க எனக்குக் குதூகலமாகின்றது' என்று கூறித் தமது திருவடியினாலே ஒரு சக்கரத்தைக் கீறினார். அது சக்கராயுதமாயிற்று. சலந்தரனை நோக்கி, இதனை உன் வலிமையினாற் சிரசிற் றூக்கியெடுத்துத் தாங்கவல்லையோ" என்று வினவினார். சலந்தரன் "யான் பிரமவிட்டுணுக்கள் முதலியோரைப் போரிலே வென்று துரத்தினேன்; வடவாமுகாக்கினியை அவித்தேன்; சமுத்திரங்களை வறளச் செய்தனென்; மலைகளையெல்லாம் எடுத்துப் பந்தம்போற் கொண்டு விளையாடினேன்; இங்ஙன மெல்லாமிருப்ப, இந்தச் சக்கரத்தைத் தூக்குவது எனக்குக் கஷ்டமா? எனநகைத்து அதனைக் கைகளாற் றூக்கி நெஞ்சிற்குக்கவைத்து, பின்னர் அதனை மிகப் பிரயாசையோடு தூக்கித் தன் தலையின் மேல் வைத்தான். உடனே ஓர் கொடிப்பொழுதில் அச் சக்கரம் அவனை ஈர்ந்து இரண்டாகப் பிளந்து சிவபெருமானிடத்திற் சென்றது. சலந்தரன் பூமியில் வீழ்ந்து மாண்டான். மகாவேகமாய்ப் பாய்ந்த இரத்தவெள்ளம் சிவபெருமானுடைய கட்டளைப்படி நரகத்திற் சென்றது. திருக்கைலாசபதி அவனுடைய சேனைகளைத் திருநேத்திரத்தினின்று பொழிந்த அக்கினியாற் பொடியாக்கி, தமது சுயவடிவத்தைக் காட்டி நின்றார்.

இந்திராதி தேவர்கள் அவரை வணங்கி, 'எம்பிரானே! அடியேங்களுடைய துன்பத்தை நீக்கியருளினீர்' என்று துதித்தார்கள். சிவபெருமான் அவர்களுக்குப் பழைய அதிகாரங்களைக் கொடுத்துத் தமது செம்பொற்றிருக் கோயிலில் வீற்றிருந்தருளினார்.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு௵ புரட்டாதி௴ ௨௮ திங்கட்கிழமை

## தமிழ் மக்கள் வகுப்பு வாதிகளா?

மிஸ்ரர் விருன்லிஸ் உ ஸோயிசா வட்டுக்கோட்டைக் கல்லூரிப் பழைய மாணவரின் கொழும்புக் கிளைச் சங்கத்தில அன்று பேசியபோது இங்குள்ள தமிழ் மக்களைப் பற்றிப் பின் வருமாறு கூறினர்:—

"அவர்கள் (யாழ்ப்பாணத் தமிழ் மக்கள்) தங்கள் குடாநாட்டளவில் நின்று விடப் பார்க்கிறார்கள்; அப்படி நிற்கப் பார்ப்பதை விட்டு அவர்கள் சற்று உதாரத்துவ முடையவர்களா யிருக்க முயலல் வேண்டும். தொகையிற் குறைந்த சாதியினர் பெரும்பான்மையும் வருப்புவாதம் பூண்டவர்களாயிருத்தல் இயல்பு; ஆனால் இந்நாட்டில் உள்ள தமிழ் மக்கள் அப்படியான தொகையிற் குறைந்த சாதியினரல்லர்; இக்காலத் தமிழ் மக்கள் கொண்டுள்ள வகுப்புவாதங் காரணமாகப் போலும் சிங்கள மக்களுட் சிலரும் வகுப்புவாதிகளாக அதற்கரிய சில சங்கங்களையும் தாபித்துக் கொண்டார்கள்; தமிழர் கொண்டுள்ள இந்த நோக்கத்தை வளரவிடாது தடுத்தற்கு வட்டுக் கோட்டைக் கல்லூரி யதிகாரிகள் இயன்றவரையில் முயற்சி செய்தல் வேண்டும்"

மிஸ்ரர் ஸொயிசா அன்று கூறிய விஷயங்களுள் இந்த ஒரு விஷயத்திற் பிழைப்பட்டு விட்டாரென்பதை நாம் மன வருத்தத்துடன் எடுத்துக்காட்ட வேண்டி ஏற்படலாயிற்று; தமிழர் வகுப்பு வாதிகளாக மாறியமை காரணமாகத்தான் சிங்களருட் சிலரும் வகுப்புவாதிகளானர்கள் என மிஸ்ரர் ஸொயிசா கூறுவது பொருத்தமுடைய தாகுமா? தமிழ் மக்கள் அந்நாள் தொட்டு இந்நாள் காறும் இலங்கையிலுள்ள சிங்களருடன் மாத்திரமல்லர், இஸ்லாமியர் பறங்கியர் ஆங்கிலர் இங்கு வந்துள்ள இந்தியர் முதலாம் எல்லாச் சாதியாரோடும் சிநேகபான்மையாகவே நடந்து வருகிறார்கள்; இற்றைக்குப் பல வருடங்கட்கு முன்னர்த் தமிழ்ப் பிரதிநிதிகளே பெரும்பாலும் பழைய சட்டநிரூபண சபையில் அங்கத்துவம் வகித்த இலங்கையிலுள்ள சகல சாதியார் பொருட்டும் தமர் பிறர் என்ற பேதம் எள்ளளவும் பாராட்டாது பிரதிநிதித்துவம் பூண்டு கடமை பார்த்து வந்தார்கள்; சென்ற 1915-ம் ஆண்டிலே சிங்களருக்கும் இஸ்லாமியருக்குமிடையே பெரும் பிணக்கு நேர்ந்து கலகம் மூண்டபோது, இலங்கை யரசினர் தொகையிற் குறைந்த சாதியினராகிய இஸ்லாமியரைப் பாதுகாக்க நோக்கங் கொண்டு சிங்களர் விஷயமாகத் துஷ்ட நிக்கிரகஞ் செய்ய முயன்ற சமயத்தும் நந்தமிழ் மக்கள் தம் பாரம்பரியமான பொதுத் தன்மையினின்றும் பிறம்பா தவர்களாய்ச் சிங்களர்க்கும் இஸ்லாமியருக்கும் தங்களால் இயன்ற உதவிசெய்தார்கள்; அந்த நேரத்திற் கண்டியிலே சிங்களக் கலகக்காரரின் அக்கிரமத்திற்குப் பயந்து இஸ்லாம் பெண்பிள்ளைகள் ஆண்கள் எல்லாரும் போய்த் தம் அரிய உயிரைக் காத்தற்கு ஒதுக்கிடந் தேடி அடைக்கலம் புகுந்தபோது, சிங்கள மக்கள் அறியாது இரகசியமாக அந்த இஸ்லாம் மக்களுக்கு ஒதுக்கிடங் கொடுத்தவர்கள் அக் கண்டி நகரிற் சீவனார்த்தமாகச் சென்று வசித்துவந்த யாழ்ப்பாணக்கடைக்காரரும் ஏனைய யாழ்ப்பாணத்தவர்களு மென்பதை நாம் நிச்சயமாக அறிந்துள்ளோம். பின்னர் அக் கலகக் காரர் விஷயமாக அரசினர் கடுமையான தண்டமுறைகளைக் கைக் கொண்டபோது, சிங்கள மக்களை அரசினர் இராசத் துரோகிகள் கலகக்காரர் என்று மதித்து அடக்கு முறையைக் கையாண்ட போது, தொகையிற் கூடியசாதியினராகிய சிங்கள மக்கள் "வேந்தன் சீறின் ஆர்த்துணையில்லை" என்ற பிரகாரம் ஏவித்து நின்று கலங்கிய போது, அவர்களுடைய குறை முறைகளை இங்கிலாந்திற் சென்று அங்குள்ளார்க்கு எடுத்துச் சொல்ல முற்பட்டவரும் ஒரு தமிழ்ப் பிரதிநிதியல்லவா? இப்பொழுது சமுத்திரப் பிரயாணஞ் செய்வோர்க்கு எவ்வளவு பாதகாப்பற்றதாய் இருக்கின்றதோ இப்படியே அந்த நேரத்தும் வெடிகுண்டுகள் விதைக்கப்பட்டு அபாயத்தோடு கூடியதாகச் சமுத்திரம் இருந்ததாகும். ஆனால் இலங்கைத் தமிழ்ப் பிரதிநிதியாகிய அந்தப் புண்ணியவான் அச்சமயத்தில் தம்முடைய அருயிரைத் திரணமாக மதித்தல்லவா ஆங்குச் சென்று தாம் சென்ற கருமத்தையும் பார்த்துக் கொண்டு சித்தாயாத்திரையாக மீண்டு வந்தார் அந்தச் செயற்கருஞ் செயலை யாரா மறுக்க முடியும்? யார் மறக்க முடியும்?

இவை மாத்திரமா? இல்லை! இல்லை!! அக்காலத்திலே இலங்கைச் சட்ட நிரூபணசபையில் கௌரவ தமிழ்ப் பிரதிநிதிகளாய் விளங்கிய ஸேர். பொன் இராமநாதன், ஸேர். அம்பலவாணர் கனகசபை, ஸ்ரீமான்கள் அ. சபாபதி, ஆ. கனகரத்தினம், (இப்பொழுது ஸேர்ப்பட்டம் வகித்திருக்கும்) வை. துரைசுவாமி, S. இராசரத்தினம் முதலிய தமிழ்ப் பெரியாருள் ஒருவராயினும் சிங்கள சாதியினர்க் கல்ல, இலங்கையிலுள்ள எச்சாதியினர்க்காயினும் மாறாக, அவர்களைப் புறக்கணித்து ஏதும் ஒரு கருமஞ் செய்தார்களென்று, மிஸ்ரர் ஸொய்சா ஆக, வேறு எவராக, விரல்மடித்துச் சொல்ல முடியுமா? அப் பெரியார்கள் இலங்கை மக்களெல்லாரும் ஒரே சாதியத்தார் இலங்கா தேவியின் புத்திரர்கள் என்று சகோதர முறை பாராட்டிப் பொதுப்படக் கருமம் பார்த்து விளங்கிய சிலர்களல்லரோ?

இப்பொழுதும் இந்த அரசாங்க சபையிலே வடமாகாணப் பிரதிநிதிகளாகத் தமிழ்த் தலைவர்கள் ஐவர் இருக்கின்றார்கள்; இவர்களுடைய கல்வியறிவு, அரசியன்ஞானம், கருமமாற்றுந் திறமை, பட்சபாதமின்மை, வாக்கு வன்மை, உள்ளதை உள்ளபடி யெடுத்துக் காட்டி வாதிக்க அஞ்சாமை, நேர்மை, இலஞ்சப் பெறக் கனவிலும் நினையாமை, அபிமானம், இராசவிசுவாசம் முதலிய சுகுணங்களையும் சத்கருமங்களையும் இட்டு எவராயினும் ஆட்சேபஞ் செய்ய முடியுமா? இப்பொழுதுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் தங்களால் இயன்ற வரையிற் சிங்களருடன் இந்நாட்டின் பொது நலத்தையிட்டு ஒத்துழைக்கலாமென்று முயன்றார்கள்; ஆனாற் சிங்களப் பிரதிநிதிகளே மந்திரிமாரான பின் இத் தமிழ்ப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பை அவர்கள் வேண்டாதொழிய, இவர்கள் புறக்கணிக்கப் படலாயினர்; இலங்கை சிங்களருக்கே உரிய நாடு, தமிழர்கள் வந்தேறு குடிகள், அநுராசபுரத்திலுள்ள தமிழர்கள் சிங்களருடைய இரத்தத்தைக்குடிக்க முயன்று வருகிறார்கள் என்பனபோன்ற பல அபவாதங்களும் தமிழ்மக்கண்மீது சிங்களராற் சுமத்தப்படலாயின. "வகுப்பிற் குறைந்த சாதியினரல்லர்" என்று மிஸ்ரர் ஸொயிசா இப்பொழுது சொல்லுந் இத்தமிழர் தாம் பல்லாற்றானும் புறக்கணிக்கப்படுதலைக் கண்டு தம் சாதியாரின் பாதுகாப்பையும் க்ஷேமலாபத்தையும் விரும்பிக் கருமமாற்றத் தலைப்பட்டனரேயொழிய இன்றைக்கும் சிங்களரோடு மாறுபட்டு வகுப்புவாதஞ் செய்யத் தலைப்பட்டாரல்லர். ஆனதால் மிஸ்ரர் ஸொய்சா தமிழ்மக்களை வகுப்புவாதிகள் என்று சொல்வது, சிறிதும் பொருத்தமாது, தமிழ்ச்சாதியாரெனிலோ தமக்குப் பிறர் தினையளவு நன்மை செயினும் அதனைப் பனையளவாக மதித்து நன்றிபாராட்டி இதமாக நடக்கும் இயல்பு பூண்டவர்களாவர்.

யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோடு

# சங்கானைக் கொலையெத்தன வழக்கு

## அலவாங்கால் அடித்துக் கத்தியாற் கையை வெட்டிய எதிரி

## எதிரிக்குப் பத்துவருடக் கடூழியமறியல்

"நீ ஒரு பெரிய கோரமான செய்கையைச் செய்திருக்கிறாய்; நீ உன்னுடைய மைத்துனனின் ஒரு கையைத் துண்டித்து விட்டாய்; உன்மீது கொலைக் குற்றஞ் சாட்டாது விட்டது உன்னுடைய அதிர்ஷ்டமென்றே சொல்லலாம்; காயக்காரன் நீ அந்தக் கைக்கு வெட்டிய வெட்டை அவனுடைய கழுத்துக்கு வெட்டியதாயும் அப்போது அவன் கையைக் கொடுத்துத் தட்டியதாயும் கூறுகிறார். காயக்காரனின் மகள் உனக்குச் சமையல் செய்து தர வந்த இடத்தில் நீ அவளோடு தகாத விதமாக நடந்திருக்க வேண்டுமென்று உன்மீது ஐயுறவு கொண்டமையாற்றான் மகளை உனக்குச் சமையல் செய்து கொடுக்காதபடி பின்னர்த் தடுத்திருக்க வேண்டும். இதனாற்றான் நீ உன்னுடைய மைத்துனனுக்கு இச் செய்கையைச் செய்திருக்க வேண்டும்" என்று நீதியரசர் சங்கானையிலுள்ள பிராம்பத்தை யென்னும் இடத்தில் வசிக்கும் சரவணமுத்து சோமசுந்தர மென்னும் எதிரிக்குத் தீர்ப்புக் கூறும்போது கூறினார்.

(நமது நிருபர்)

சங்கானையிலுள்ள பிராம்பத்தையில் வசிக்கும் சரவணமுத்து சோமசுந்தரம் சென்ற 1941-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ந் திகதி பிற்பகல் 1 மணியளவில் அவ்வூர் இராமலிங்கம் ஐயாத்துரையைக் கத்தியால் வெட்டியும் அலவாங்கால் அடித்துங் கொலைசெய்ய எத்தனித்ததாக்க் குற்றஞ்சாட்டிய வழக்குச் சுப்பிறீம் கோட்டில் விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

வழக்கின்சாரமாவது:

எதிரியின் சகோதரி அன்னபூரணத்தைக் காயக்காரனாகிய இராமலிங்கம் ஐயாத்துரை விவாகஞ் செய்திருந்தான். எதிரியினுடைய தாயார் எண்ணெய் வியாபாரஞ் செய்பவள். எதிரியுந் தாயாரும் ஒரே வீட்டில் வசித்து வந்தனர். எதிரியும் காயக்காரனும் ஒரு வளவில் வெவ்வேறு வீட்டிற் சீவித்தனர். இவர்கள் இருவருடைய வீட்டேக்குமிடையில் ஒரு வேலி அடைக்கப்பட்டிருக்கிறது. எதிரி தாயாரை மிகவும் கொடுமையாக நடத்தியதால் தாயார் எதிரியினுடைய வீட்டை விட்டுச் சுன்னாகத்தில் போய்ச் சீவித்து வந்தாள். தாயார் சுன்னாகத்திற்குப் போனபின்பு அன்னபூரணத்தின் வீட்டிற்கு வந்து போவதுண்டு. எதிரிக்குத் தாயார் சமையல் செய்து கொடுக்காததாற் காயக்காரனின் மகள் சென்று சமையல் செய்து கொடுத்து வந்தாள். ஒரு நாள் எதிரியின் தாயார் மகள் வீட்டிற்கு வந்து போனதை எதிரி கண்டு அவர்களை வைதான். இவைகளை விட எதிரி இச் சம்பவத்திற்குச் சில நாட்களுக்கு முன்னர்க் காயக்காரனின் மகளுக்குக் கதிரித்தம்பி கந்தையாவை விவாகஞ் செய்வதற்குக் காயக்காரனிடம் கேட்டபோது காயக்காரன் மறுத்து விட்டான். இவன் இப்படிப் பேசியது ஏனென்றால் தான் கதிரித்தம்பி கந்தையாவின் சகோதரியை விவாகஞ் செய்ய நினைத்து.

இச் சம்பவத்தன்று காயக்காரனும் மகன் சிவசம்புவும் மனைவியாரும் வீட்டுத் திண்ணையில் இருக்க போது எதிரி அங்கு ஓர் அலவாங்கையுங் கோடேவாக்கத்தியுங் கொண்டு சென்று; காயக்காரனாகிய இராமலிங்கம் ஐயாத்துரைக்கு முதல் அலவாங்கால் இரண்டு மூன்று முறை கையில் அடித்துப் பின்னர்க் கத்தியாற் கழுத்திற்கு ஓங்கினான். காயக்காரன் மற்றக்கையை உயர்த்திக் கொடுத்துத் தடுத்தான். அப்போது வெட்டு வலது கையில் விழுந்தது. காயக்காரன் அறிவு மயங்கி விழுந்து விட்டான். எதிரி ஆயுதங்களோடு தன்னுடைய வீட்டிற்குச் சென்றுவிட்டான், இச்சம்பவம் போலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. போலிசார் இடத்திற்குச் சென்று காயக்காரனுக்கு முதற்சிகிச்சை யளித்தனர். இப்படிச் செய்ததால் அவனுக்குச் சீவனுக்கு மோசமில்லாது போனதென டாக்குத்தர் கூறியிருந்தார்.

காயக்காரனாகிய இராமலிங்கம் ஐயாத்துரை கூறியதாவது:

நான் எதிரியினுடைய சகோதரியை விவாகஞ் செய்திருக்கிறேன். எதிரிக்கு இப்போது 25 அல்லது 30 வயதுவரையிருக்கும்.

எதிரி தன்னுடையவீட்டிற்சீவித்து வந்தார். எதிரியினுடைய வீடும் என்னுடைய வீடும் ஒரே வளவில் இருக்கிறது. இருவருடைய வீட்டையும் ஒரு வேலி பிரிக்கிறது. அந்த வேலியில் ஆட்கள் போக்குவரவு செய்யக் கூடியதாக ஒரு வழி விடப்பட்டிருக்கிறது. எதிரியின் தாயார் உயிரோடு இருக்கிறார். இச் சம்பவத்திற்கு முன்னர், தாயார் தான் எதிரிக்குச் சமையல் செய்து கொடுத்தார்: இப்போது தாயார் சுன்னாகத்தில் வசிக்கிறார். இச்சம்பவத்திற்கு 3 மாசத்திற்கு முன்னர் எதிரி அவருக்குத் தொந்தரவைத் கொடுத்ததால் அவர் சுன்னாகஞ் சென்று சீவித்து வருகிறார். எதிரியின் தாயார் இடையிடையே என்னுடைய இல்லத்திற்குவந்துபோவதுண்டு. இது எதிரிக்குப் பிடிக்காததால் எதிரி எங்களை வைதார். எதிரி எங்களை வைததால் நான் என்னுடைய மகளை எதிரிக்குச் சமையல் செய்து கொடுக்காது தடுத்தேன். எதிரியின் தாயார் சுன்னாகம் போன காலந் தொடக்கம் என்னுடைய மகள் அவருக்குச் சமையல் செய்து கொடுத்து வந்தாள். எதிரி என்னுடைய மகளுக்குக் கதிரித்தம்பி கந்தையாவை விவாகம் பேசினார். இப்படி அவர் பேசினது இச் சம்பவத்திற்குப் 15 அல்லது 20 நாட்களுக்கு முன்னர். எதிரி கந்தையாவின் சகோதரியை விவாகஞ் செய்ய இருந்தார். நான் என்னுடைய மகளின் விவாகத்திற்கு மறுத்து விட்டேன். பின்னர் எதிரி என்னுடைய இல்லத்திற்கு வராது விட்டு விட்டார். எனக்கு அவர்மீது கோபமில்லை.

இச் சம்பவத்தன்று நான் என்னுடைய இல்லத்துத் திண்ணையில் இருந்தபோது எதிரி ஒரு கையில் ஒரு அலவாங்கையும் மற்றக் கையில் ஒரு கோடேவாக் கத்தியையுங் கொண்டு வந்தார். அவர் எனக்குக் கிட்ட வந்து அந்த அலவாங்கால் என்னுடைய இடது கையில் இரண்டு முறை அடித்தார். மூன்றும் முறை தலையில அடித்தார். நான் விழுந்தேன். அப்போது அவர் கத்தியை என் கழுத்துக்கு வெட்ட ஓங்கினார். நான் என்னுடைய வலக் கையைக் கொடுத்தேன். வெட்டுக் கையில் விழுந்தது. கை வெட்டுண்டு தூங்கிக் கொண்டிருந்தது. நான் அறிவு மயங்கிக் கிடந்தேன். பின்னர் அறிவு வந்தபோது போலிசார் வந்து என்னுடைய காயத்திற்கு முதற்சிகிச்சை யளித்தனர். பின்னர் என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். நான் ஆஸ்பத்திரியில் 26 நாட்கள் இருந்தேன். இச் சம்பவம் நடந்தபோது என்னுடைய மகன் சிவசம்பு அங்கே நின்றான். அவன் என்னுடைய சகோதரன் மார்க்கண்டுவுக்கு இதனை அறிவித்தான். மார்க்கண்டு வந்து இச்சம்பவத்தைப் போலிசாருக்கு அறிவித்தார். எதிரி எனக்கு அடித்ததும் அவ்விடத்தை விட்டு ஆயுதங்களோடு தன்னுடைய இல்லத்திற்குச் சென்று விட்டான். நான் எதிரிக்கும் என்னுடையமகள் நாகம்மாவுக்கும் சிநேகமுண்டென்று சந்தேகிக்கவுமில்லை, அதனுல் அவளை எதிரிக்குச் சமையல் செய்து கொடுக்க வேண்டா மென்று மறிக்கவுமில்லை. இப்போது என்னுடைய மகள் எதிரியோடு புருஷன் மனைவியாக விருக்கிறாள். நான் ஆஸ்பத்திரியிலிருந்துவீட்டிற்குப் போனபின்னர்த் எதிரி அவளைக் கூட்டிக் கொண்டு போய் வைப்பாட்டியாக வைத்திருக்கிறார். எதிரிக்கு ஒரு முயற்சியுமில்லை.

இதன் பின்னர், டாக்குத்தர் J. M. சோமசுந்தரம் காயக்காரன் மனைவி அன்னபூரணம் காயக்காரன் சகோதரன் மார்க்கண்டு முதலியோர் சாக்ஷியம் கூறினர்.

பின்னர் எதிரி சாக்ஷியம் கூறவந்து ஓர் அளவு கூறிய பின்னர்த் தனக்கு ஒன்றுந் தெரியாதெனக் கூறினார்.

எதிரி பக்கத்தார் எதிரி புத்தி சுவாதீனமானவரல்ல ரென்றும்; இச்சம்பவம் நடக்கும்போதும் அவர் அப்படித்தான் இருந்தாரென்றும் கூறினர்.

விசாரணை முடிவில் யூரிமார் ஏகமனதாக எதிரியைக் கொலை செய்ய எத்தனித்ததாகிய குற்றச் சாட்டிற்குக் குற்றவாளியாய்க் காண்பதாக அபிப்பிராயந்தெரிவித்தனர். நீதியரசர் எதிரிக்குப் பத்து வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

# வல்லுவெட்டிக் கொலை எத்தன வழக்கு

## எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்

## சாக்ஷிகளுக்கு நீதியரசரின் எச்சரிக்கை

10-10-41

பருத்தித்துறை டிஸ்திரிக்கைச் சேர்ந்த வல்லுவெட்டியில் வசிக்கும் V. பொன்னையா அல்லது பூதத்தம்பி, K. சுப்பிரமணியம் ஆகியோருள் முதலாமெதிரி சென்ற 1941-ம் ஆண்டு ஜனவரிமீ 5ந் திகதி பிற்பகல் 7 மணியளவில் அவ்வூர் வேலுப்பிள்ளை-நாகமுத்துவுக்குக் கத்தியாற் குத்திக் கொலைசெய்ய எத்தனித்ததாயும் இரண்டாமெதிரி மேற்கூறியவருக்குக் கத்தியாற் சாதாரண காயம் வருவித்ததாயும் குற்றஞ் சாட்டிய வழக்குச் சுப்பிறீம்கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

யூரித்தலைவராக மிஸ்றர் V. வீரசிங்கம் தெரிந்தெடுக்கப்பட்டார்.

காயக்காரனாகிய வேலுப்பிள்ளை-நாகமுத்து கூறியதாவது:—

எதிரிகள் இருவரையும் எனக்குத் தெரியும். முதலாம் எதிரி இரண்டாமெதிரியின் சகோதரியை விவாகஞ் செய்தவர். எதிரிகள் எனக்குஞ் சொந்தமானவர்கள். எனக்கும் எதிரிகட்குமிடையில் இச்சம்பவத்திற்கு முன்னர் ஒருவகையான கோபமுமிருந்திருக்கவில்லை. நாங்கள் இருபகுதியாரும் போக்குவரவு செய்தோம்.

அச் சம்பவத்தன்று நான் என்னுடைய "நாதகிராவத்தை" யென்னுங் காணிக்குச் சென்றேன். அங்கே 4 அல்லது 5 ஆடுகளும் ஓர் எருதும் நின்று சிறு வடலிகளை கடித்ததைக் கண்டேன். நான் ஆடுகளைக் கலைத்து எருதை மாத்திரம் பிடித்தேன். ஆடுகள் ஓடித் தப்பிவிட்டன. நான் பிடித்த எருதை என்னுடைய தாயார் வீட்டிற் கொண்டு போய்க் கட்டிவிட்டுப் புகையிலை நாற்றுகளையும் கொண்டு தோட்டத்திற்குச் சென்றுவிட்டேன்; பின்னர் 5 அல்லது 5½ மணிவரையில் திரும்பிவந்து தாயார் வீட்டிற் கட்டிவைத்த மாட்டைக் காணாது விசாரித்தேன். தாயார் இரண்டாம் எதிரி வந்து மாட்டைக் கொண்டுபோனதாயும அங்குள்ள என்னுடையவொன்றை வெட்டிய தாயுந் தமக்கு அடித்ததாயுங் கூறினள். நான் அங்குள்ள மாட்டுக் கொட்டிலில நின்று இரண்டாம் எதிரியை வைதேன். அப்போது இரண்டாம் எதிரி அங்கு ஒரு கத்தியோடு வந்து "யாரையடா ஏசுகிறாய், வெளியில்வாடா துண்டு துண்டாய் வெட்டுகிறேன்" என்று கூப்பிட்டார். நான் ஒரு பூவரசந் தடியைப் பிடுங்கிக்கொண்டு வெருட்டுதற்குச் சென்றேன். அப்போது இரண்டாம் எதிரி கையை ஓங்கினான். நான் என்னுடைய தடியால அவனை அடித்தேன். அவன் என்மீது கத்தியை எறிந்தான், என்மீது கத்திவிழுந்து காயமுண்டாக்கிறது. பின்னர் இரண்டாம எதிரி அவ்விடத்தை விட்டு ஓடினான். நான் அவனைத் துரத்திச் சென்றேன். அவன் கள்ளுத் தவறணையிருந்த பக்கமாக ஓடினான். இப்படி ஓடியபோது அவன் தடக்குண்டு விழுந்தான். நான் அவனுக்குத் திருப்பவும், விழுக்கூடுக்கூடதபோது அடித்தேன். இப்படி அடிக்கும்போது யாரோ பின் முதுகில் கத்தியாற் குத்தினர். நான் திரும்பிப் பார்த்தேன். முதலாம எதிரி அங்கு நின்றான். முதலாம்எதிரிக்கும் அத்தடியால அடித்தேன். அந்த அடி அவனுடைய தலையிற் பிடித்தது. முதலாம எதிரி திரும்பித் தன்னுடைய கடைப்பக்கமாக ஓடினான். நான் அவனைத் துரத்திச் சென்றேன். இரண்டாம் எதிரி எங்கு சென்றான் என்று எனக்குத் தெரியாது. நான் முதலாம எதிரியைச் சிறிது தூரம் கலைத்து வந்து என்னுடைய தாயாரின் வீட்டுப் படலையடியில் திரும்பிவந்ததும் விழுந்துவிட்டேன். பின்னர் எனக்கு அறிவு மயங்கிவிட்டது. பின்னர் ஆஸ்பத்திரியில் அறிவு தெளிந்தது. இந்த இடத்திற் கார்த்திகேசு கந்தையா, தாமோதரம்பிள்ளை உபாத்தியாயர் கந்தையா வாசவர்கள் இருந்தார்கள். அடுத்தநாள் நான் பொலிசாருக்கும் நீதிபதிக்கும் வாய்முறைப்பாடு கூறினேன்.

இதன்பின்னர்க் கார்த்திகேசு-கந்தையாவும் சின்னையா-தாமோதரம்பிள்ளையும் மற்றவர்களும் சாக்ஷியம் கூறியபின்னர் வழக்காளி பக்கத்து விசாரணைமுடிவடைந்தது.

நீதியரசர் சாக்ஷிகள் ஒருவருக்கொருவர் முரண்பாடாகவும் முன்னுக்குப் பின் முரண்பாடாகவும் கூறியமையால் யூரிக் கனவான்களிடம் இவ் வழக்கின் விசாரணையை இன்னும் தொடர்ந்து நடத்தப்பட வேண்டுமோ அல்லது இவ்வளவில் நிறுத்தப்படுதல் நல்லதோவென்று அவர்களின் அபிப்பிராயத்தை யறிந்தார். அவர்கள் தாங்கள் கலந்து ஆலோசனை செய்தபின்னர் விசாரணையை இவ்வளவோடு நிறுத்தி எதிரிகளைக்குற்றவாளிகளல்லரெனக் காண்பதாக அபிப்பிராயந் தெரிவித்தனர். மேலும் இவ்வழக்கில் விசேஷமாகச் சின்னையா-தாமோதரம்பிள்ளை பொய்ச் சாக்ஷியம் கூறியிருப்பதால் அவர் அப்படிச்செய்தமைக்கு விதிக்கப்பட வேண்டிய தண்டனையை நீதியரசர் பொறுப்பில் விடுவதாயும் கூறினர். நீதியரசர் சாக்ஷிகள் எல்லோரையும் அழைத்து மிகவும் கடுமையாக எச்சரித்துச் சாக்ஷிகளாகிய கந்தையாவுக்கும் தாமோதரம் பிள்ளைக்கும் வத்தாப்பணம் கொடுக்காது தடுத்து ஓர் உத்தரவையிட்டு எதிரிகள் இருவரையும் விடுதலை செய்தார்.

## மனைவியைக் கொன்ற புருஷனு?

### மாமியையும் அலவாங்கால் அடித்துக்கொன்றுனும்

7-10-41

நேற்று நடுப்பகல் வரையில் வல்லுவெட்டித் துறையைச் சேர்ந்த வல்லுவெட்டி யென்னுமிடத்தில் ஒரு புருஷன் தனது மனைவியையும் மாமியாரையும் ஓர் அலவாங்கால் அடித்துக் கொலை செய்ததாகக் கூறப்படுகிறது.

வல்லுவெட்டியில் வசிக்கும் சங்கரப்பிள்ளை-கந்தையா தனது மனைவியார் தங்கம்மாவோடு சந்தோஷமாகச் சீவித்து வந்ததாயும், நேற்று நடுப்பகலளவிற் சங்கரப்பிள்ளை-கந்தையா தன்னுடைய மனைவியாரிடம் வெற்றிலை பாக்குக் கேட்டதாயும் அதிலிருந்து இருவரும் வாக்குவாதப்பட்டதாயும், சங்கரப்பிள்ளை-கந்தையா வாக்குவாதத்தால் கோபமடைந்து ஓர் அலவாங்கைப்பிடித்து மனைவியாரின் தலையில் அடித்ததாயும் அவள் உடனே அவ்விடத்தில் விழுந்து இறந்ததாயும் தங்கம்மாவின் தாயார் கதிராசி மகளைக் காப்பாற்றச் சென்றபோது கந்தையா கதிராசிக்கும் அந்த அலவாங்கால் அடித்ததாயும், உடனே கதிராசி காயங்களோடு புலோலி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாயும் அவள் அங்கே இறந்து விட்டதாயுமறிகிறோம்; இச் சம்பவம் வல்லுவெட்டித்துறைப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டுப் பொலிசார் விசாரணை செய்கிறார்கள். எதிரி இன்னும் அகப்படவில்லை.

## வீட்டுக்குள் நுழைந்து திருட்டு

### சண்டிருப்பாய் வாசி மீது வழக்கு

11-10-41

சண்டிருப்பாயில் வசிக்கும் பொன்னன்-மாணிக்கன் அவ்வூர்ப் பொன்னன்-வெள்ளையன் என்பவனுடைய வீட்டின் சுவரின் மேலாக ஏறி உள்ளே சென்று ரூபா 75 ஐக் களவாடிச் சென்று ரூபா 5-36½ சதத்தைப் புதைத்துவைத்த இடத்திற் பொலிசார் கண்டெடுத்ததாகவும் இன்று பொலிசார் வீடு டைத்துக் களவெடுத்ததாகக் குற்றஞ்சாட்டி ஒரு வழக்கை நீதிபதி மிஸ்றர், குவிண்டன் பேர்னுன்டோ முன்னிலையிற் றொடர்ந்தனர். எதிரிதான் குற்றவாளியல்லவெனக் கூற, நீதிபதி எதிரியைப் பிணையில் விட்டு வழக்கை மேல் விசாரணைக்குத் தவணையிட்டார்.

## நம்பிக்கை மோச வழக்கு

### எதிரிக்கு அபராதமும் கோடுமுடியும்வரை மறியலும்

11-10-41

சங்கானையைச் சேர்ந்த பண்டத்தரிப்பில் வசிக்கும் கிராமச் சங்கத் தலைவர் கணபதிப்பிள்ளை வன்னித்தம்பி சென்ற 1939-ம் ஆண்டு நவம்பர் மீ 20-ந் திகதி முதல் 1940-ம் ஆண்டு பெப்ரவரி மீ 10-ந் திகதிக்கு மிடையே பண்டத்தரிப்புச் சந்தைக் குத்தகைக்காக அவ்வூர்ச் சின்னட்டி-விஜயரத்தினம் செலுத்தக் கட்டப்பட்ட ரூபா 260 ஐ நம்பிக்கை மோசஞ் செய்ததாகக் குற்றஞ் சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிபதி திரு. C. குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். நீதிபதி எதிரிக்கு ரூபா 250 அபராதமும் கோடு முடியும்வரை மறியற் றண்டனையும் விதித்தார். அபராதப் பணம் கட்டத் தவறினல் ஆறுமாதச் சிறைத்தண்டனை அநுபவிக்க வேண்டிவரு மென்றும் கூறப்பட்டது.

## பொலிசிற்கு விரோதமாக முறைப்பாடு

சங்கானைப் பொலிஸ் உபபரிசோதகராகிய A. F. கஸ்டரூ என்பவருக்கும் வேறு இரு பொலிசருக்கும் விரோதமாக, அவர்கள் ஓர் உற்சவம் உலா வரும்போது இடைவழியில் தடுத்து உற்சவத்திற்குப் பங்கஞ் செய்தார்களென, அவ்வூர்த் திரு. T. பொன்னுத்துரை யென்பவர் ஊர்காவற்றுறை நீதிதலத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். அவர் செய்த முறைப்பாடு:—

"சென்ற யூலாய் மாதம் நேர்ந்த கிராமச்சங்க வட்டாரப் பிரதிநிதித் தேர்தற் காலந் தொடக்கமாக, அந்த வட்டாரத்திலிருக்கும் சில கிறிஸ்தவர்களுடைய தூண்டுதலினால் சங்கானைப் பொலிசார் சிலர் எனக்கு மாறுகச் சில செயல்களைச் செய்யலாயினர். சென்ற செப்டெம்பர் மாதம் 30உ விஜயதசமித் திருவிழாவை நான் ஆரம்பித்து நடத்தினேன். சங்கானைப் பொலிஸ்தானத்திற்கு அணித்தாக உள்ள ஒரு கோயிலுக்குச் சுவாமி எழுந்தருளச் செய்து கொண்டுபோனேம். குறித்த பொலிஸ்தானத்திற்கு நேரே போகும்போது உப பொலிஸ்பரிசோதகர் கஸ்டரூவும் காசிம் என்னும் ஒரு பொலிசும் இன்னொரு பொலிசும் எதிரே வந்து மேளவாத்தியத்தை அடிக்கவொட்டாது தடுத்தனர். காஸிம் என்ற பொலிஸ் தம் கையிலிருந்த குறுந் தடியினல் ஒரு மேளத்தை அடித்துப் பொழ்த்துவிட்டார். குறித்த உபபொலிஸ் பரிசோதகரும் இரு பொலிஸருமாக மேளகாரர் இருவரையும் கோயில் மனேசரையும் அன்றிரவு 8 மணி தொடக்கம் மூன்று மணிநேரமாகப் பொலிஸ்தானத்திற் பிடித்து அடைத்து வைத்துவிட்டார்கள். மேளங்களையும் மேளகாரரையும் அடுத்தநாள் மல்லாகம் பொலிஸ்கோட்டிற் கொண்டுவந்து சேர்ப்பதாகப் பொலிசார் அந்த நேரத்திற் சொன்னார்கள். அந்த நிலைமையில் சனங்கள், மேளமில்லாமலும் கோயில் முதலாளியில்லாமலும் சுவாமியைக் கொண்டுபோதல் முடியாததாக, சுவாமியை நடுத்தெருவிற்றானே வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். பிறகு பொலிசார் தாம் அடைத்து வைத்திருந்த ஆட்களை விடுதலை செய்து ஒரு அநுமதிப் பத்திரத்தை (லைசென்ஸ்) யும் கொடுத்தார்கள்; ஆனால் சுவாமி பிருந்த இடத்தில் ஏனைய ஆட்கள் இல்லாமையினாலே சுவாமியை எழுந்தருளப் பண்ணுதல் முடியாததாக, சுவாமி அப்படியே தெருவில் விடப்பட்டது. இம் முறைப்பாட்டின் பின் நீதிபதி குறித்த பொலிஸ் பகுதியாருக்குக் கட்டளைப் பத்திரம் பிறப்பித்து விடுத்துள்ளார்.

### தமிழ் ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சை 1942

1942-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் [illegible] இரண்டாம் தொடக்கம் தமிழ் ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சை நடைபெறும்.

2 பரீட்சார்த்திகள் — அ — தராதரப்பத்திரத்திற்[illegible] 1941-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் திகதி [illegible]

3 [illegible]

ஆ. [illegible] 1938-ம் ஆண்டுப் பரீட்சையில் 2-ம் பகுதியில் [illegible] 1940-ம் ஆண்டுப் பரீட்சையை [illegible]

ஆ. [illegible] 1940-ம் ஆண்டுப் பரீட்சையில் 2-ம் பகுதியில் [illegible]

4 [illegible]

1 [illegible]

2 [illegible]

ஆ [illegible] 1 — 24-ம் [illegible]

5 1941-ம் ஆண்டு நவம்பர் 12-ம் திகதிக்கு [illegible] 1940-ம் ஆண்டு [illegible]

[illegible] வித்தியாதிபதி.

வித்தியாபகுதி
கொழும்பு, 1941-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ஆ.

G 6, 9 & 13-10-41



# மெலிந்து சோர்வுற்று பலமிழந்து ஊக்கமற்று இருக்கும் சகலருக்கும் ஓர் விசேஷச் செய்தி

ஜீவாதார உலோக சத்துக்களடங்கிய இந்தச்சிறந்த சாதனம் உங்களுக்குப்புதிய ஆரோக்கியமும் ஊக்கமும் பலமும் அளிக்கும்

பழனி சி. எம். சாமி அசல் தங்கபஸ்பத்தை இன்று முதலே சாப்பிட்டு வாருங்கள். உஷ்ணம், மேகம், கடுப்பு, மூலம், நீரிழிவு, வாதம், தொய்வு, க்ஷயம், குன்மம் இவைபோன்ற ஏனைய எல்லா நோய்களும் நீங்கிவிடும். தண்டிப்பாசம் பலனடைவீர்கள். தேகம் பூராவும் புதுரத்தம் பாயும். பசி குறியுண்டாகும். நரம்புகள் வலுவடையும், கண்கள் பிரகாசமடையும். சீக்கள் வாலிப பலமும் தேக திடகாத்திரமும் அடைவீர்கள்.

24 நாள் பஸ்பம் விலை ரூபா 10

தலைமை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S I

கிளை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை சதிரோசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y221 31-3-41—30-3-42



வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸின்

# புடைவைகள்

இப்போது யாழ்ப்பாணத்தில் ஒவ்வொருவீட்டிலும் பேசப்படும் வார்த்தைகளாம்

ஒருமுறை பரீக்ஷித்தால்— எப்போதும் விரும்பப்படுவது.

ஒவ்வொருவிதமான தினிசிலும் நாம் புடைவைகளைச் செய்கிறோம்.

| | |
|---|---|
| வேட்டிகள் | டிரில்லுகள் |
| சால்வைகள் | சூற்துணிகள் |
| சேலைகள் | நசூர்கள் |
| சாரங்கள் | 'ஷேட்' துணிகள் |
| கம்பாய்கள் | ஷீட்டுகள் |
| துவாய்கள் | பஞ்சணை உறைகள் |
| லோங்குளோத்ஸ் | மேசைத்துணிகள் |
| மல்லுகள் | பப்ளின்கள் |
| பெட்ஷீட்டுகள் | யன்னல்துணிகள் |

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு.

எங்கள் சில்லறைக் கடைக்கு வாருங்கள்.

பெரியகடை, யாழ்ப்பாணம்.

வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ்,

(இந்தியாவில் ஸ்தாபிதமானது):

(அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

Mis 127, 11-10-40-



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,36700

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசத்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

Y 58 A. 21-11-40—20-11-41 (தி)

S. கனகசபை
சிறுப்பர்.


இந்துக்கள் கையில் இருக்கவேண்டியது
இந்துசாதனமே

## சிவஞான போதம்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

இரண்டும் தம்முள் வேற்றுமை யுடையவல்ல என்பது தேற்றமாயினும் உயிர்களுக்கு மல நீக்கத்தின் பொருட்டு அத்துவித சிவோகம் பாவனை கூறப்பட்டது என்று சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்திற் கூறப்பட்டிருப்பது காணலாம்.

கருட னுருவல் கருது மனத்திற் பருவிடத்தீர்க்கு பயங்கெடுமாபோற் குருவி னுருவங் குறித்தவப் போதே நிரிமலன் நீர்க்கு சிவனவ னுமே.

எனத் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார் திருமூலர்.

இனி, கருடன் ஆதிபௌதிக கருடன், ஆதிதைவிக கருடன், ஆத்தியான்மிக கருடன் என மூவகைப்படும். உலகத்திற் காணப்படுங் கருடன் ஆதிபௌதிக கருடன், அதற்கு அதி தெய்வமாய் மாந்திரிகன் உள்ளத்தில் அதுபோல வைத்துத் தியானம் செய்து கணிக்கப்படும் கருட மந்திரம் ஆதிதைவிக கருடன். அம் மந்திரத்திலிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிக கருடன். ஆதிதைவிக கருட மந்திரத்தை காடோறும் பயின்று வந்த பயிற்சியினாலே அம் மந்திரமே தானாக அருக்கிய பாவனை செய்து தன் அறிவு அதன் வசமாகும்படி உறைத்து நின்று, அம் மந்திரக் கண்கொண்டு பார்க்கவே விஷவேகம் நீங்குதல் நிச்சயம். அதுபோலச் சிவோகம் பாவனை செய்து வருங்கால் எய்தும் சிவத்துவ விளக்கம் வாயிலாகப் பாசமாகிய விஷம் நிச்சயமாய் நீங்கிவிடும்.

விஷம் தீர்த்தலாற் கருடபாவனை உண்மையேயாம். பட்சி மிருகம் தாவரம் முதலியவற்றுக் கெல்லாம் அதி தெய்வ மந்திரங்கள் உள்ளன. தாவர சங்கமங்களுள் மந்திரங்களாலே அதிட்டிக்கப்படாத உயிர் இல்லை. ஆன்மா அம் மந்திரங்களுள்ளே எந்தெந்த மந்திரத்தைச் செபிக்கினும், அந்தந்த மந்திரரூபி ஆகின்றான். அத்துவித பாவனை யோடு கூடியவன் சிவனை ஆன்மாவிற் கண்டு, முழுதும் வியாபகமாய் நின்று அறிவதாகிய சர்வஞ்ஞனுய் நின்மலனுய் கேவலமாய் நின்று அக்ஷயமாகியபேரின்பத்தை அடைகின்றான் என்பது சர்வஞ்ஞோனுத்தரம்;

இவ்வதிகரணத் தேர்கைப் பொருள்

இவ்வதிகரணத்தினாலே, அசத்தாகிய பிரபஞ்சத்தை அசத்தெனக் காணவே மேற்கூறிய திருவடிஞானம் விளங்கித் தோன்றும் என்றும், பிரபஞ்சத்தை நீங்கிய விடத்துச் சூனியப் பொருள் போல முன்னர்த் தோன்றினும் அத் தோற்றம் சூனியமன்று. ஞான சொரூபியாய மன்னும் பிரபஞ்சம்நீங்கியவிடத்து விஷயமாவது உயிரன்று என்றும் சத்தை அடைதற்கு உபாயம் சிவோகம் பாவனை என்றும் கூறப்பட்டன. (வரும்)

## சலந்தராரி

1-ம் பக்கத் தொடர்ச்சி

சிவபெருமான் சலந்தராசுரனைக் கொன்றருளியமையால் சலந்தராரி எனப்படுவர். இது இருபத்தைந்து மூர்த்தங்களுள் ஒன்று.

இச் சரித்திரம் கந்தபுராணம், கூர்மபுராணம் முதலிய மகாபுராணங்களிலே பரக்கக் கூறப்பட்டிருக்கின்றது. தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளும் இவ்வற்புதச் செயலைச் செப்பும்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

ஆருமெதி ராதவலி யாகிய
சலந்தரனை யாழி யதனால்
ஈரும்வகை செய்தருள் புரிந்தவ
னிருந்தவிடம் தன் வினவில்
ஊருமர வம்மொளிகொ ண்மாமணி
யுமிழ்ந்தவை யுலாவி வரலால்
காருமிருள் கடித்தகதிர் மின்னை
விளங்குகா ளத்தி மலையே.

எனவும்,

தரைதனோடு திவிதலங் கலிதரு
தருதிற லுறுசலந் தரனது
வரையன தலைவிசை யொடுவரு
திகிரியை யரிபெற வருளின
னுரைமலி தருசுர நதிமதி
பொதிசடை யவனுறைபதி மிகு
திரைகலி கடன்மண லணிதரு
பெறுதிடர் வளர்திரு மிழலை.

எனவும் திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரத்திற் கூறப்படுதலானும்,

சாமிதி சலந்தரன் போர்
வேண்டினானைச்
சக்கரத்தா லெரிப்பித்த
சதுரர்போலும்
மாமணியொரு கங்குலாற்
காதர்போலும்
காரணனை விடப்பாக
தடைத்தார்போலும்
குமரனையு மகனாக
வுடையார்போலும்
குளிர்வீழி மிழலைமர்
குழகர்போலும்
மமரர்களின் மனமுணர்ந்தும்
கண்டார்போலும்
மடியேனை யாளுடைய
வடிகளாமே.

எனத் திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்திற் கூறப்படுதலானும்,

எங்குங் கலந்து என் னுள்ளத்
தெழுகின்ற
வங்க முதல்வ னருமறை
யோகிபால்
பொங்குஞ் சலந்தரன்
போர்செய்ய நேர்மைபி
னங்கு விரற்குறித்
தாழிசெய் தானே.

எனத் திருமந்திரத்திற் சொல்லப்படுதலானும் இச்சரித்திரம் வலியுறுத்தப்படும்.

சிவபெருமான் உக்கிர வடிவங் கொண்டார் என்று கூறப்பட்டிருப்பதனால் அது அவருடைய பெருங் கருணைக்கு இழுக்காகுமோ எனில் ஆகாது.

சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்திலே "அரசன் கோபமிலனாயினும் குடிகளுக்கு அவனமாட்டு அச்சம் குடிகளுக்கு நிகழுதல் இயற்கையே. அதுபோலச் சிவபெருமான் இன்னருள் மூர்த்தியாயினும் அநேக குரியர் ஒரோவழித் தலைப்பட்டு விளங்குதலின் திருவுருத்திரத்தட் பீமன் எனப்படுகிறார். இன்னும் வேதம் சிவபெருமானை அநூததக்க வச்சிரம் என்று கூறும்? இங்ஙனம் சிவபெருமான்பாட்டு அச்சகாரணத்துவமுண்மையினன்றே வாயு பானு அக்கி இந்திரன் இமயன் முதலிய தேவர் தொழில்களை அஞ்சி வகித்து உய்க்கின்றார் எனக் கூறப்படுவதால் தத்தம் அவ்வுண்மை தெளியப்படும்.

செய்பவராதலையுடைய தமது வலியின் அளவறியாதே மனவெழுச்சியினால் தம்பின்வலியரோடு வினை செய்தலைத் தொடங்கி, அவர் எதிர்தலான் அது செய்து முடிக்கப் பெறுது இடையே கெட்டவர் உலகத்துப் பலராவர். சலந்தரனும் ஈசனது போர்த்திறலை அறியாது இறந்து அழிந்தான்.

### சோமேசர் முதுமொழி வெண்பா

சக்கரத்தை யேற்பன் சலந்தரனு
னென்றெடுத்துத்
தக்கமுற்ற வீடினனே
சோமேசா—வொக்கும்
உடைத்தம் வலியறியா
ருக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

—சைவசாஸ்திர பரிபாலனம்.


"காயகல்ப"
அனுகூல சிகிச்சை

காயசித்தி, தத்துவக்குறைவு, சலரோகம், வாதம், சிறுமின்னை வாதம், வலி, தோற்புரை வியாதிகள், குட்டம், ஆதியாம் நோய்களுக்கு அனுகூலமான சிகிச்சை.

மேகராசா

சலரோகம், நீரிழிவு ('அல்புமென்' அடையல், புளித்திராவகம், அதிக நீரிழிவு ஆகிய எந்தநிலையிலிருப்பினும்) க்குக் கைகண்டமருந்து. பத்தியம் இல்லை. 15 நாட்களுக்குக் காணக்கூடிய போத்தல் ஒன்றுக்கு விலை ரூபா 4-00.

சுண்டிக்குளித்தபாற்கந்தோர்த் தலைமைமினவருமாறுஎழுதுகிறார்:- நீரழிவுக்குரிய உங்கள் மேகராசா என்னும் மருந்தை நான் ஒரு மாசமாக உபயோகித்தேன். என் சலம் சுத்தமாகி விட்டது. இந்தச் சிகிச்சைக்காக உங்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்ஙனம்,
P. நடராஜா.

பின்வருவோரைக் கலந்தாலோசியுங்கள்:—

டக்டர் K. T. மங்களம்
R. I. M. P.
(சென்னை)
M. S. V. S. அங்கத்தவர்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
Q 82 7-8—6-11-41



விளம்பர விகிதம்

முதன்முறைக்கு

[illegible]

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

[illegible]


## நாம் செய்ததென்ன?

1-ம் பக்கத்தொடர்ச்சி

சைவர்களே, எழுந்திருங்கள்! விடிந்து வெகுநேரமாகிவிட்டது. இன்னு முறங்காதீர்கள்! உங்கள் புதல்வி புதல்வர்களைச் சைவப்பாடசாலைகளுக்கனுப்புங்கள்! சைவப்பாடசாலைகளிலும் சைவசாஸ்திரங்களைக் கற்றுக்கொடுக்கும் பாடசாலைகளுக்கே அனுப்புங்கள் எமது தேசபாஷை மூலம் கல்வி பயிலும் முறையை ஏற்படுத்த வழிவகைகளைத் தேடுங்கள்.

இன்றுவரையில் எம்மில் அநேகர் எமது பரோபகாரிகள் செய்த சேவைகளை மறந்துவிட்டார்கள். அவர்கள் செய்த நன்மைக்கு நாம் செய்த பிரதி நன்மைதானென்னே! இனியாகுதல் தமிழையும் சைவத்தையும் ஓங்கவைப்பதே நாம் செய்யக்கூடிய பிரதியுபகாரம். மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

மூன்றும் பக்கத்தொடர்ச்சி

### அக்டோபர் செவ்வாய் 14

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 டி. பி. ராமகிருஷ்ணன் பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 டாக்கிப் பாட்டுகள் † 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 சங்கீதம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 கடத்தூர் வெங்கடேசய்யர் வீணை 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 ஆர். வி. சுப்ரமணியம் வீணை 5-45 இசைப் பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-30 ரேடியோ வாத்தியக் கோஷ்டி 7-00 சபரி நாடகம் 7-15 நாமும், யுத்தமும் பேச்சு 7-30 அறிவிப்புகள் இடைவேளை † 7-45 தமிழில் செய்திகள் 8-00 மதராஸிலுள்ளபடி டி. ஆர். மஹாலிங்கம் புல்லாங்குழல் 9-15 இடைவேளை † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

### அக்டோபர் புதன் 15

காலை 7-30 கீதாரம்பம் † 7-40 தமிழில் செய்திகள் 7-50 எஸ். டி. செல்லப்பா பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 டாக்கிப் பாட்டுகள் † 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 இசைக் கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 எஸ். டி. செல்லப்பா பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 பேலகவாடி வரதராஜ ஐயங்கார் பாட்டு 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-30 மருங்காபுரி கோபால கிருஷ்ணய்யர் வயலின் 7-00 ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் † 7-15 செய்திகளின் ஆதாரம் 7-30 அறிவிப்புகள் இடைவேளை † 7-45 தமிழில் செய்திகள் 8-00 பேலகவாடி வரதராஜ ஐயங்கார் பாட்டு 8-30 மருங்காபுரி கோபால கிருஷ்ணய்யர் வயலின் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.


விசேஷ அறிவித்தல்

சம்பூரண கைரேகை பலன், ஆருடம் (சிந்தனை சாஸ்திரம்) முதலிய சாஸ்திர சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கீழ்க் காண்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.

கிரகஸ்புடம், தச வர்க்கம், அஷ்டவர்க்கம், பாவநிலை முதலிய கணித வகைகளும், மகாதெசா புத்தி பலன், துவாதச பாவபலன், கோசரபலன், காலசக்கரபலன் முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—

ந. சின்னத்துரை
போக்கத்தை,
கைதடி வடக்கு, கைதடி.
Y 67 20-7-41—19-7-42



வியாபாரத்திற்கு விளம்பரஞ் செய்க

பத்திரக்கிரயம்

[illegible] தமிழ் ரூபா 5-00 இங்கிலீஷ் தமிழும் 9-00

இலங்கை இந்தியா 8-00 இங்கிலீஷ் தமிழும் 12-00

தொடுவாய் பகுதி 9-00 இங்கிலீஷ் தமிழும் 13-00

தனிப்பிரதி சதம் 5

முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்



# N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo.

Telephone No. 30.

(Y 20— 1-4-41—31-3-42) தி



# புதிய வெளியீடுகள்

சிவிக்ஸ் (Civics) எனப்படும்

## குடி இயல் நூல்

இலங்கை வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப் பெற்றவை.

(அங்கீகார இலக்கம், 21 A & B / 41 திகதி 3-7-41)

6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50

7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைப் பிரசுரமாக அச்சிடப்பட்டுள்ளன.

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.


## சிறையில் ஜவஹரோடு பேட்டி

டேராடூன், அக் 4

மகாத்மாகாந்தியின் காரியதரிசியான மகாதேவதேசாய் டேராடூன் டிஸ்திரிக் சிறையிலுள்ள பண்டிதநேருவைப் பேட்டிகண்டு பேசினர்.


# S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1942)

## பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம்

மூலமும் உரையும்

பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்சை வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார்பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள் மேற்படி பரீட்சைக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதியொன்றின் விலை ரூபா 1 சதம் 10

தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

இந்துசாதனம் 20-8-40

மனேஜர்.



# தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள், சிமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.

"புரேப்ரைட்டர்"

Y 19. 4-3-41—3-3-43

K. A. இரத்தினசிங்கம்


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.


Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday October 13th 1941.